

# சோட்டா பீமுடன் சுகாதாரம்

புத்தகம் 3

# ஈக்களின் படை

# சோட்டா பீமுடன் சுகாதாரம்

இந்த கதை புத்தகம் நாடக அடிப்படையிலான பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக எழுதப்பட்டது. இது இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது

நீங்கள் இந்த பாடத்திட்டத்தை பார்த்து பதிவிறக்கம் செய்ய https://elab.emerson.edu/hygiene/


உருவாக்கியவர்கள்

ENGAGEMENT LAB

கூட்டமைப்பாளர்கள்

GREEN GOLD Animation Pvt Ltd

MARY ANNE CHARITY TRUST MACT

ஆதரவு அளித்தவர்கள்

UBS

UBS Optimus Foundation



ஜக்கு வழக்கம் போல காட்டிலுள்ள மரங்களின் மேல் தாவி குதித்து  விளையாடிக்கொண்டிருக்கிறான். அப்போது அவன் அந்த இடத்தில் விசித்திரமான சப்தம் வருவதை கவனிக்கிறான், அந்த சத்தம் வரும் இடத்தை ஜக்கு  போய் பார்க்கும் போது  அங்கு தீமை நிறைந்த பச்சை நிற கண்களுடன் 'அசுத்த மந்திரவாதி', அங்கு ஒரு பெரிய பானையில் ஏதோ மாயமந்திரங்களை சொல்லி பிதற்றிக்கொண்டிருக்கிறான். ஜக்கு உடனே ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு அசுத்த மந்திரவாதி செய்வதை கவனிக்க ஆரம்பிக்கிறான்.

டோலக்பூரில் இப்போதுவரை  யாரும் ஒழுங்காக டாய்லட் பயன்படுத்துவதில்லை என்று உற்சாகமாக கூறியபடி, அசுத்த மந்திரி ஏதோதோ மந்திரங்களை செய்ய துவங்குகிறான்.



ஒரு அசுர சிரிப்போடு அசுத்த மந்திரவாதி மந்திரங்கள் செய்கிறான். அதன் விளைவாக அந்த பானையில் இருந்து ஈக்கள், திடீரென கூட்டம் கூட்டமாக பறந்து வர ஆரம்பிக்கிறது. மந்திரவாதி அவற்றை டோலக்பூரை நோக்கி ஏவி விடுகிறான். அந்த ஈக்கள் பாய்ந்து செல்லும் காட்சிகள் அந்த மந்திர பானையில் தத்ரூபமாக தெரிகிறது.



அந்த ஈக்கள் திறந்த வெளியில் கிடக்கும் மலத்தின் மீது உட்கார்ந்து விட்டு அவை பறந்து சென்று  டோலக்பூர் மக்கள் சாப்பிடும் உணவுகளிலும் உட்காருகிறது. அந்த காட்சியை மந்திரபானையின் வழியாக மந்திரவாதி பார்த்து ரசிக்கிறான்.



டோலக்பூரில் மலத்தில் உட்கார்ந்த ஈக்கள் டோலுவும் போலுவும் சாப்பிடும் லட்டுவின் மீது அவர்கள் கவனிக்காத வேளையில் உட்கார்ந்து அதன் கால்களில் உள்ள மலம் அத்தனையும் ம் தேய்துவிடுகிறது.

ஆனால் அவர்கள் அதுதெரியாமல் லட்டுவை சாப்பிடுகிறார்கள். மலம் கலந்திருக்கும் லட்டுவை, டோலுவும் போலுவும் சாப்பிடுவதை பார்த்து ஜக்குவிற்க்கு அருவருப்பு தோன்றுகிறது.

டாய்லட்டை (கழிவறையை) ஒழுஙகா பயன்படுத்தலேனா இப்படித்தான் சாப்பிடும் சாப்பாட்டில் ஈக்கள் மலத்தை கொண்டுவந்து போட்டுவிடும்,



அசுத்த மந்திரவாதி ஏதோ அவனுடைய அடுத்த மந்திரத்தை சொல்ல சொல்ல, வானம் இருண்டு திடீரென டோலக்பூரில் மழை பெய்யதுவங்குகிறது. மழைபெய்யும் காட்சிகளை அந்த பானையின் வழியாக மந்திரவாதி பார்க்கிறான்.



டோல்க்பூரில் உள்ளவர்கள் இன்னமும் திறந்தவெளியில் தான் மலம் கழிக்கிறார்கள். மழையினால் உருவான ஆற்று வெள்ளம், பொதுவெளியில் கிடக்கும் மனிதகழிவகளையும் அடித்துகொண்டு போய் ஆறு, குளம், ஏரி, கிணறு, என எல்லா நீர்நிலைகளிலும் சேர்க்கிறது.

எல்லோரும் அந்த அசுத்தமான தண்ணீரையே குடிக்கவும், குளிக்கவும், சமைக்கவும், உபயேகிக்க ஆரம்பிக்கின்றனர்.

அசுத்த மந்திரவாதியின் மந்திர பானையில், ஒருவர் மலம் கலந்த தண்ணீரை பருகும் காட்சி தெரிகிறது, பார்பதற்கு அந்த தண்ணீர் சுத்தமாக தெரிந்தாலும் அதில் கிருமி கலந்திருக்கிறது.

டாய்லட்டை பயன்படுத்தவிட்டால், நாம் குடிக்கிற தண்ணீரிலே கூட மலம் கலந்திட் வாய்ப்புள்ளது. அந்த நீரை பருகினால் யாராக இருந்தாலும் வயிற்றுக்கோளாறுகள் கண்டிப்பாக உண்டாகும்.

ம்லம் கலந்த நீரை  தனது நண்பர்களும், ஊர்மக்களும், குடிப்பதைப்பார்த்துஜக்குவிற்கு அருவருப்பாகிறது. ஜக்கு காட்டில் தான் பார்த்ததை தன் நண்பர்களிடம் சொல்வதற்க்காக டோலக்பூரை நோக்கி வேகமாக ஓடிச்செல்கிறான்.


ARTAN SHOP

டோல்க்பூரில் பீமும் அவன் நண்பர்களும் நமது ஊரில் உள்ளவர்களுக்கு அடிக்கடி வயிற்றுப்போக்கும், வயிற்று உபாதைகளும் வருதாகவும் அதற்கான காரணத்தை எப்படியும் உடனடியாக கண்டுபிடித்து தீர்வு காண்பது என அலோசனை செய்கிறார்கள்.


RTAN SHOP

ஜக்கு வேகவேகமாக மூச்சு வாங்கியபடி ஓடிவருகிறான். அப்போது பீம் தன் கையில் இருந்த லட்டு மீது ஈ உட்கார்ந்ததை கவனிக்காமல் சாப்பிடுவதற்க்காக அவன் வாயின் அருகே கொண்டு செல்லும் போது ஜக்கு அதை பீம் சாப்பிடவிடாமல் தட்டிவிடுகிறான்.

ஜக்கு பீம் மற்றும் நண்பர்களிடம், அசுத்த மந்திரவாதி மந்திரங்களை பயன்படுத்தி ஈக்களை ஏவிவிட்ட காட்சிகளை, தான் காட்டில் இருந்து பார்த்ததாக விளக்கி சொல்கிறான்.


BARTAN SHOP
FRUITS SHOP
KIRANA SHOP

உடனே எல்லோரும் கைகழுவம் பாடலை பாடி தூய்மை மந்திரவாதைய உதவிக்கு அழைக்கின்றனர்.

அவர் சிறுவர்கள் முன் தோன்றி அதன் காரணத்தை அறிந்த பின் அவர் இந்த விசயத்தில் தான் தனிப்பட்ட முறையில் எதுவும் செய்ய முடியாது எனவும், திறந்த வெளியில் மக்கள் மலம் கழிக்கும் ஒவ்வொரு முறையும் அசுத்த மந்துரவாதியின் சக்தி அதிகமாகும் எனவே எல்லொருக்கும் ஏன் நோய் வருகிறது என்பதை புரியவைக்குமாறு அறிவுருத்தி விட்டு மறைகிறார்.


BARTAN SHOP
KIRANA SHOP

சுக்கி, இந்த வியாதி ஏன் உண்டாகிறது, எப்படி பரவுகிறது என்பதை மக்கள் எல்லோருக்கும் சரியாக புரியவைத்தால், இனிமேல் நோய்களின் பாதிப்பு வராமல் பார்த்துக்கொள்வார்கள் என ஆலோசனை கூறுகிறாள்.

பீமும் நண்பர்களும் டோலக்பூரில் எல்லோரையும் அழைத்து அசுத்த மந்திரவாதி நம் ஊரில் தீய மந்திரங்களை பயன்படுத்தி தண்ணீரிலும், சாப்பாட்டிலும் மலத்தை கலந்துவிட்டிருக்கிறான் என சொல்ல, ஊர்மக்கள் எல்லோருக்கும், அருவருப்பும், கோபமும் வருகிறது.

அவர்கள் இனிமேல் மலம் கலந்த தண்ணீரையும் சாப்பாட்டையும் தொட கூட மாட்டோம் என உறுதியாக கூறுகிறார்கள்.


BARTAN SHOP
SHOP
SHOP

கூட்டத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு கருத்தை சொல்ல ஆரம்பிக்கின்றனர்.

ஒருவர் எல்லா ஈக்களையும் அழித்துவிடலாம், என கூறுகிறார் மற்றொருவர் மழை பெய்யாமல் இருந்தாலே நல்லாயிருக்கும் போல என்கிறார்.

சுக்கி இது மழையோட தவறோ இல்ல ஈக்களோட தவறோ இல்ல, நாம் ஒழுங்கா டாய்லட்ட பயன் படுத்தாமல் திறந்த்வெளியில் மலம் கழிப்பதால அந்த அசுத்த மந்திரவாதியோட மந்திரத்துக்கு அதிகமா சக்தி கிடைக்கிறது என சொல்கிறாள்.

ஊரில் எல்லோருடனும் ஆலோசித்த பின் சுக்கி டோலக் பூரின் வரைபடத்தை தரையில் வரைந்து, அதில் தண்ணீர் கிடைக்கும் நீர் ஆதாரங்களை ஃ மார்க் போட்டு குறிக்கிறாள்
ஒரு இடத்தில் கோலமாவை தூவி அதுதான் டாய்லட் உள்ள இடம் என அதன் மேல் ஒரு கல்லைத்தூக்கி மூடி வைக்கிறாள், மற்ற இடங்களில் கோலமாவை பரவலாக தூவி விடுகிறாள்.


BARTAN SHOP
KIRANA SHOP
SHOP

ஈ போல நடிப்பது எப்படி என கற்றுக்கொடுக்கிறாள்.

பின்னர் ஈக்கள் போலவும், மழை பொழிவது போலவும் கோலமாவின் மீது மக்கள் அங்கும் இங்கும் நடக்க வைக்கபடுகின்றனர்


BARTAN SHOP
SHOP

இப்பொழுது மூடாமல் வைத்திருந்த கோலமாவு வரைபடத்தின் எல்லாஇடங்களிலும் பரவிக்கொடக்கிறது, ஆனால் டாய்லட்டில் உள்ள கோலமாவு எங்கேயும் பரவாமல் இருக்கிறது.

கல்லை வைத்து மூடிய கோலமாவு ஒரே இடத்தில் கிடக்கிறது ஆனால் மூடாத கோலமாவு எப்படி கிராமத்தின் எல்லா இடங்களிளும் பரவிக்கிடக்கிறதோ அது போலவே மனிதகழிவுகளும் திறந்து கிடப்பதால் சுலபமாக பரவும்.

வீட்டிலே டாய்லட் இருந்தா அது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும், ரொம்பவே பாதுகாப்பாக இருக்கிறது. மலம் கழிப்பதற்க்காக ரொம்ப தூரம் இருட்டில் செல்லவேண்டியது இருக்காது, மேலும் இயற்கை உபாதைகளை நாம் அடக்கிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை என சுக்கி புரியும்படி விளக்குகிறாள்

பீம் எல்லோரும் டாய்லட்டை பயன்படுத்தி அசுத்த மந்திரவாதியின் திட்டத்தை தோற்க்கடிக்க வேண்டும் என கூறுகிறான்.